சிறப்பிதழ்
Special Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr.A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R.Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி–620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்

பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை &தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி –620 020.

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

6 பகுதி-7
சிறப்பிதழ்
Special Issue

மற்றொன்று:

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Modern Thamizh Research

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN : 2321 - 984X

ISSN : 2321-0737


| | | |
|---|---|---|
| 361. வே. மகேஸ்வரி | வள்ளலாரின் கடவுள் சிந்தனை | 1319-1322 |
| 362. சு. மகேஷ் பாண்டி | பழந்தமிழிலக்கியத்தில் பெண்களுக்கானப் பிரச்சினைகளும் தீர்வுகளும் | 1323-1325 |
| 363. நா. மணிகண்டபிரபு | புலம்பெயர் மக்களின் வாழ்வியற் நெருக்கடிகள் : சயாம் மரண இரயிலில் மலேயத் தமிழர்கள் மாய்ந்த வரலாறு | 1326 1331 |
| 364. அ. மணிமேகலை | புறநானூறு கூறும் அறம் | 1332-1334 |
| 365. ம.அ. மணிமேகலை | திருவாசக யாப்பியல் : விருத்தம் | 1335 1338 |
| 366. ஜெ. மதிவேந்தன் | தனித்தமிழ் இயக்க இதழியல் வரலாறு | 1339 1344 |
| 367. க. மதுமிதா | நாலடியார் காட்டும் நட்பு நெறி | 1345 1347 |
| 368. மு. மதுவந்தி | நோயற்ற வாழ்வுக்குத் தமிழிசைப் பாடல்கள் | 1348 1351 |
| 369. ப.ம. மயிலா | குளச்சல் மு. யூசுப்பின் மொழிபெயர்ப்பில் விளிம்புநிலை மக்கள் | 1352-1355 |
| 370. கா.மலர்விழி | பெண்ணியப் பார்வையில் வாஸந்தியின் ஆகாசவீடுகள் | 1356-1360 |
| 371. ச. மலையபெருமாள் | தென்னூல் காட்டும் இலக்கிய வகைகள் | 1361-1365 |
| 372. செ.மனோகரன் | சிலப்பதிகாரத்தில் ஊடல் | 1366-1369 |
| 373. வை. மனோகர் | நாலாயிர திவ்விய பிரபந்தம் மயிலை மாதவதாஸன் பதிப்பும் உள்ளடக்கமும் | 1370 1373 |
| 374. மு.ரா.மஜிதா பர்வின் | தமிழரின் தொடர் ஆண்டும் தமிழ்ப்புத்தாண்டும் | 1374-1377 |
| 375. ச. மாசிலாதேவி | பழந்தமிழரின் போர் மாண்புகள் | 1378-1382 |
| 376. சு. மாதுகண்ணன் | தொல்காப்பிய எண்வகை வனப்புகளில் அம்மையின் இலக்கிய வடிவம் | 1383 1385 |
| 377. சு. மாரித்தங்கம் | எட்டுத் தொகையில் அக இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள் | 1386-1388 |
| 378. இரா. மாரிமுத்து | குறுந்தொகையும் நீர் மேலாண்மையும் | 1389 1391 |
| 379. மு. மாரியம்மாள் | நாடகத்தமிழ் தோற்றமும் வளர்ச்சியும் | 1392-1394 |
| 380. மா.மார்கிரேட் மலர்க்கொடி | கிறித்தவத் திருமறையில் காணப்படும் உவமைகள் | 1395-1397 |
| 381. பா. மாலதி | தமுவற்காப்பியம் | 1398 1399 |
| 382. சு. மீனலோசினி | வைரமுத்துவின் நாவல்களில் வெளிப்படும் பெண்களின் ஆளுமைத்திறன் | 1400-1403 |
| 383. அ. மீனா | புறப்பாட்டில் செவியறிவுறூஉ. | 1404-1407 |
| 384. இரா. மீனா | களவழிநாற்பதில் பாடுபொருட்கள் | 1408 1412 |
| 385. வெ.ரா.மீனாட்சி | அற இலக்கியங்களில் மானிடவியல் | 1413-1416 |
| 386. ச. மீனாட்சி & ப.மீனாட்சி | அற இலக்கியத்தில் ஊனுண்ணிகள் (பதினெண்கீழ்க்கணக்கு) | 1417-1420 |
| 387. மா. மீனாட்சி | குலசேகராழ்வாரின் உருக்காட்சி வழி பக்தி நெறிகள் | 1421 1424 |
| 388. கி. முகிலரசி | தொல்காப்பிய புறநெறியில் திருக்குறள் | 1425-1428 |
| 389. மு.முத்தமிழ் | வைரமுத்து கவிதைகளில் அங்கதம் | 1429 1433 |
| 390. பா.முத்தரசி & த. கருப்பையா | 'அஞ்ஞாடி' புதினத்தின் அடித்தள மக்களின் வாழ்வியல் | 1434-1437 |
| 391. ஆறு. முத்துக்கருப்பன் | சங்க இலக்கியத்தில் பாரதக் கதைகளும் வரலாற்றுக் குறிப்புகளும் | 1438 1441 |
| 392. நா.முத்துக்குமாரி & ஆ.ரந்திர் குமார் | கவிஞாயிறு தாராபாரதி கவிதைகளில் சமூகச் சிந்தனைகள் | 1442-1444 |
| 393. க. முத்துமணி | சங்ககால கல்விமுறை | 1445 1446 |
| 394. சி. முத்துமாலை | திருமந்திரம் கூறும் வாழ்வியல் நெறிகள் | 1447-1449 |
| 395. சு. முத்துலெட்சுமி | பக்தி இலக்கியத்தில் பெரியபுராணத்தின் பங்கு | 1450-1453 |
| 396. மா. முத்துவிஜயலட்சுமி | விவேக சிந்தாமணியில் நட்பின் திறம் | 1454 1456 |
| 397. சி. முரளிதரன் | திருக்குறளில் கல்விநிலை | 1457-1459 |
| 398. க. முரளிதரன் | கலித்தொகையில் தொன்மக் கூறுகள் | 1460 1462 |
| 399. சு. முருகலெட்சுமி | தமிழ் இலக்கியத்தில் மருத்துவம் | 1463-1467 |
| 400. கி. முருகன் | கலித்தொகை காட்டும் ஆயர் வாழ்வியல் | 1468-1472 |
| 401. ப. முருகன் | குழந்தை இலக்கியம் ஒரு பார்வை | 1473 1475 |
| 402. ப. முருகேசன் | சங்க இலக்கியத்தில் கூத்து | 1476-1478 |
| 403. க. முனியதேவி | பன்முக நோக்கில் பக்தி இலக்கியம் | 1479-1480 |
| 404. ஆ. முனியாண்டி | குறுந்தொகையில் பறவைகள் | 1481 1483 |
| 405. ஷா. முஹம்மது அஸ்ரின் | மதுரைக்காஞ்சியில் வணிகச் செய்திகள் | 1484-1488 |
| 406. ப.சு. மூவேந்தன் | தமிழ்க்கவிதைகளில் மக்களும் மானுடமும் | 1489 1493 |
| 407. செ. மெல்வின்ராஜா | 'மனப்பூக்களின் மகரந்தங்கள்' (மலேசியா) சிறுகதைத் தொகுப்பில் பெண்ணியச் சிக்கல்கள் | 1494 1497 |
| 408. இல.மேகலா | மறந்து போகுமோ ஆசை முகம் - என்னும் நாவலில் மொழிநடை | 1498 1500 |
| 409. ப. மேகலா | சீவகசிந்தாமணியில் மக்கள் வாழ்வியல் | 1501-1503 |
| 410. S. மேகலின் சந்திரா | சூழலியலும் ஐம்பேரியற்கை நாவலும் | 1504-1507 |
| 411. க.மேனகாகாந்தி | தமிழ் வளம் | 1508 1511 |
| 412. கா.மைதீன் | இஸ்லாம் நெறியில் பேரன்பைப் போதித்த நபிகள் பெருமகனார் | 1512-1517 |
| 413. ஜெ.மெரின் ஜெரின்டா & மு.சாந்தகுமாரி | விவிலியத்தில் இலக்கியப்பாங்கு | 1518-1520 |
| 414. சு.மேரி சுபா செல்வராணி | கதைப்பாடல்களும் புராணக்கூறுகளும் | 1521-1523 |
| 415. ப. மோகனசுந்தரி | சங்க இலக்கியங்களில் பெண்கள் | 1524 1526 |
| 416. மு. மோகனலட்சுமி | நன்னூல் விருத்தியுரையில் சங்கர நமச்சிவாயரின் உரைநெறியும் விளக்க நயமும் | 1527-1530 |
| 417. பா. மோகன் | வன்பரணர் பாடல்களில் கண்மரக் கோப்பெருநள்ளியின் அறம் | 1531-1533 |
| 418. மோனிஷா. தி. ரே | கூட்டுக் குஞ்சுகளின் வழி சமுதாயப் பார்வை | 1534 1537 |
| 419. கோ. ரங்கராஜன் | நாட்டுப்புற இயலில் வினாயகர் | 1538-1541 |
| 420. பா. ரதிதேவி | சங்க காலம் காட்டும் கைம்மை நிலை | 1542-1546 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# எட்டுத் தொகையில் அக இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

**முனைவர் சு.மாரித்தங்கம்**

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

பழங்கால தமிழ் மக்களின் வாழ்வியல் ஒழுக்கம், ஒழுக்காறுகள், உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை நம் சங்க இலக்கியங்கள் "குன்றின் மேல் விளக்காக" தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலப்பரப்புகளில் வாழ்ந்த மக்களின் மரபுகளை தேனாக சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது. இக்கட்டுரையில் அக இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகளைக் காண்போம்.

## அக இலக்கியங்கள்

சங்ககாலப் புலவர்கள் வாழ்க்கையின் இரு கூறுகளாகிய அகத்தையும், புறத்தையும் தம் வாழ்வில் கண்டு வந்தனர். வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பாடல்களை அவர்கள் அகப்பாடல்கள் என்றும், புறப்பாடல்கள் என்றும் வகைப்படுத்தினர். அகமும், புறமும் சங்க இலக்கியத்தின் இரு கண்களாகும். தமிழ் அகப்பொருள் என்பது பாடுபொருள் பற்றிய பெயரன்று. பாடுபொருளும், பாடல் முறைமையும் இணைந்து வருகின்ற ஓர் இலக்கிய வடிவமாகும்.

அகம் என்பது மனிதனுடைய அக உணர்வுகளைப் பற்றிக் கூறும் ஒரு சித்திரம் எனலாம். அகப்பொருள் பாடல்கள் தனித்து இல்லாமல் அறிவு சார்ந்த நிலையில் புலநெறித் தன்மையில் படைக்கப்பட்டுள்ளன. பிறருக்கு எடுத்துரைக்க முடியாமல், தானே உணரக் கூடியதை மனதில் அனுபவிக்கக்கூடிய சிந்தனைகளை அகப்பாடலுக்குள் அடக்கினர்.

## தொல்காப்பியர் கூறும் அகம்

அகவொழுக்கத்திற்கு முதன்முதலில் இலக்கணம் வகுத்த பெருமை தொல்காப்பியரைச் சாரும். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என அகத்திற்கு நான்கு இயல்கள் கூறினாலும், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் ஆகியவற்றிலும் அகப்பொருள் பற்றிய செய்திகளைக் கூறுகிறார்.

தொல்காப்பியர், அகத்திணையியலில் அன்பின் ஐந்திணைக்குரிய தலைமக்களைக் கூறிவிட்டுக் கைக்கிளைக்கும், பெருந்திணைக்கும் உரிய தலைமக்களை,

> **"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
> **கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்"**
> **(தொல். ஆகத். நூ.25)**

என்ற நூற்பாவில் கூறுகிறார். இம்முறையை விடுத்து பெயர்சுட்டிக் காதல் கூறப்படுமாயின் அக்காதல், எத்துணைச் சிறந்ததாயினும் அகத்திணையாகாது. தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரும், பெயர் குறிப்பிடப்படுமாயின் அவை, புறத்தின் பாற்படும் என்று கூறுகிறார்.

## தொகை நூல்களில் அக இலக்கியங்கள்

எட்டுத்தொகையில் அகவாழ்வு அடிப்படையிலான செய்திகளைத் தருபவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களாகும். இந்நூல்கள் சங்ககால மக்களின் காதல் வாழ்வையும், கற்பு வாழ்வையும் பல்வேறு நிலைகளில் சித்தரிக்கின்றன.

நற்றிணை : மணமகன் கொடை

தலைவியை மணந்து கொள்ள தலைவன் காலம் நீட்டிக்கின்றான். அவனுக்கு வரைவினை உணர்த்தி பரிசாக மணமகன் தரும் கொடையினை உரைப்பதாக அமைந்த பாடல்...

"தாமரைக்கு இறைஞ்சும் தண்துறை ஊரன்
சிறுவளைவிலை எனப் பெருந்தேர்
பண்ணி, எம் முன்
கடை நிற்இச் சென்றிசி னோனே!"
(நற் : 300)

தன் தலைவியை மணந்து கொள்ள விரும்பியவர்கள் அவள் வளையல் செய்து அணிந்து கொள்ளட்டும் என்று தன் தேரை ஓட்டிவந்து தலைவியின் வீட்டு வாயிலில் பரிசுப் பொருளாக நிறுத்தி விட்டுச் சென்றுள்ளனர். நீயும் உன் தேரில் வா, திரும்பிச் செல்லாதே என்று கூறுகின்றாள்.

குறுந்தொகை - இல்லற மாண்பு

சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி வளர்த்ததை பல்வேறு பாடல்கள் மூலம் உணர முடிகிறது. புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும், தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவக்குகிறார்கள். தலைவி செல்வச் செழிப்புடன் வளர்ந்தவள். தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆவல் கொள்ளுகிறாள்.

அன்புடன் தலைவனுக்கு தயிர்க் குழம்பை தயார் செய்கிறாள். செய்த குழம்பினைக் கணவனுக்கு இடுகிறாள். அது மிகவும் சுவையாக உள்ளதாகத் தலைவன் பாராட்டி மகிழ்ந்து உண்கிறான். அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது.

"குவளை உன்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதன் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"
(குறுந் : 167)

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு ஒழுக வேண்டும் என்ற நற்கருத்தை வலியுறுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

தலைவியின் காதல்

தோழியானவள் தலைவனது நட்பைப் பழித்துக் கூறுமிடத்து தலைவி தன் தலைவன் மீது கொண்ட காதலின் காரணமாக நட்பை சிறப்பித்துக் கூறுகிறாள்.

"நிலத்தினும் பெரிதே: வானினும் உயர்ந்தன்று:
நீரினும் ஆர் அளவின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு,
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே!"
(குறுந். 3)

எனும் பாடல் வரிகளில் தலைவன் மீது கொண்ட நட்பானது நிலத்தைக் காட்டிலும் பெரியது, வானைக் காட்டிலும் உயர்வானது, கடல் நீரைக் காட்டிலும் ஆழமானது என்று தலைவன் மீது கொண்ட காதலை வெளிப்படுத்துகிறாள்.

ஐங்குறுநூறு

தன் கணவன் ஊரில் பாலை நிலத்தில் உள்ள கிணற்றடியில் கிடக்கும் அழுகல்நீர், தன் தாய் வீட்டில் உண்ட தேன்கலந்த பாலைவிட இனிமையாகக் கருதும் பெண்ணைப் பற்றிய செய்தியைக் கபிலர் கூறுகின்றார்.

"தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
ஊவலைக் கூவற்கீழ் .....
மானுண்ட எஞ்சிய கலுழி நீரே"(ஐங் : 203)

ஒரு குறிப்பிட்ட அரசனை வாழ்த்திப் பாடும் போக்கினை இந்நூலில் மட்டுமே காண முடியும். "வாழி ஆதன் வாழி அவினி" என்ற அடி வேட்கைப்பத்தில் இடம்பெற்றுள்ளது.

கலித்தொகை

காதல் வாழ்வின் நுட்பங்களை மிக அழகாகக் கூறுவது கலித்தொகை. இருக்கின்ற ஒரே ஆடையைப் பகுத்து உடுத்தி வாழும்

கொடிய வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் வாழ்க்கையே சிறந்த இல்லற வாழ்க்கை என்பதை

"ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"(கலி. 18)

என்று புலவர் ஒருவர் பாடுகின்றார்.

காதலன் துன்பத்தில் பங்கு ஏற்றலை விடக் காதலிக்குப் பெரிய இன்பம் இல்லை என்கிறாள் ஒரு தலைவி என்பதை,

"அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு" (கலி. 6)

எனும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

## அகநானூறு

அகநானூறு பண்டைத் தமிழரின் அரசியல் வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அறியப் பெருந்துணை செய்யவல்லது. மக்களின் அன்றாட வாழ்வு பற்றியும், பழக்க வழக்கங்கள் பற்றியும் அரிய செய்திகள் இதில் உள்ளன.

"இம்மை உலகத்தை இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறவர்ப் பயந்த செம்மலோர் " (அகம். 66)

மேற்கண்ட பாடலில் மக்கட்பேற்றின் சிறப்பு எடுத்தாளப்பட்டுள்ளது.

கொங்கு நாட்டில் நடக்கும் உள்ளித் திருவிழாவில் மக்கள் இடுப்பில், சலங்கைபோல் மணிகளைக் கட்டிக் கொண்டு ஆடுகின்றனர். இச்செய்தியை

"கொங்கர்
மணி அரை யாத்து மறுகின் ஆடும்
உள்ளி விழவின் அன்ன
எலர் ஆகின்று, அது பலர் வாய்ப்பட்டடே?"
(அகம் 15)

என்று மருதனிளநாகனார் கூறுகின்றார். தலைவிக்கும் தலைவனுக்கும் உள்ள அலரினை ஊர் மக்கள் பேசிய செய்தியினை தலைமகட்கு செல்லுவாளாய்த் தோழி கூறியதாகும். ஆண்களும், பெண்களும் இடுப்பில் மணிகளைக் கட்டிக் கொண்டு ஆடும் பழக்கம் இருந்துள்ளதை அகநானூற்றின் வழி தெரிந்து கொள்ளலாம்.

## முடிவுரை

பண்டைய புலவர்கள் மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்து இலக்கியத்தின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். மனிதனின் வாழ்வுக்கு காவலாகத் தரப்பட்டுள்ள இலக்கியங்களே வாழ்வியல் இலக்கியங்களாகத் தகுதி பெறுகின்றன. சங்க இலக்கியங்களே சமுதாயத்தின் கட்டமைப்பினை விளக்கும் ஆதாரமாகவும், மனிதனின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் களமாகவும் அமைவதைக் காணலாம்.

ஞ

ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)

Since 1951

ஆற்றல் வளத் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020. தமிழ்நாடு, இந்தியா

பொருண்மை :

# பன்முகத் தளத்தில் தமிழியல்

நாள் : 28.11.2019 (வியாழக்கிழமை)

UGC

## முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி மற்றும்
## அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் இணைந்து

பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்

– பன்னாட்டுக் கருத்தரங்கம் –

## வளநபர்ச் சான்றிதழ்

திரு. / திருமதி / செல்வி முனைவர் சு. மாரித்தங்கம்
வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டணம் அவர்கள்
'எட்டுத்தொகையில் அக இலக்கியங்களில்
வாழ்வியல் கூறுகள்' என்னும் தலைப்பில்
கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

முனைவர் க. சிராஜுதீன்
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் & செயலாளர்

முனைவர். அ. செய்யத் ஜாகீர் ஹசன்
தமிழ்த்துறைத்தலைவர் (பொ)
கலைப்புல முதன்மையர்

முனைவர் S. இஸ்மாயில் முகைதீன்
முதல்வர்